DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No. 51 /2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW16 |
| Name | : | அயுப் கான் |
| Father's / Husband's Name | : | ரகிம் பாய் |
| Age | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Caste | : | |
| Village | : | |
| Date | : | 14.02.2020. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாவில் குடியிருக்கிறேன். நான் பிரம்பு தொழில் செய்கிறேன். இறந்துப்போன சிவக்குமாரை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு சிவக்குமார் விபத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். என்னிடம் காட்டபடும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்தையும் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.8. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.9. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலிசார் விசாரணையில் 06.11.2015 அன்று என்னையும் மோதிலால் நேரு என்பவரையும் வாலாஜா போலிசார் அழைத்ததின் பேரில் நாங்கள் சென்ற போது 1ம்

எதிரி கார்த்திக் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த வாக்குமூலத்தில் நானும் மோதிலால் நேரு என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் லாவாண்யாவை பார்த்திற்க்காக பயன்படுத்திய இரு சக்கரவாகனத்தை தன்னுடன் வந்தால் ஆஜர் செய்கிறேன் என்று சொன்னதின் பேரில் அம்மூர் வடக்கு சைதாப்பேட்டையில் உள்ள சேகர் என்பரின் வீட்டில் இருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் மோதிலால் நேரு என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No. 51 /2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW17 |
| Name | : | மோதிலால் நேரு |
| Father's / Husband's Name | : | திருநாவுக்கரசு |
| Age | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Caste | : | |
| Village | : | |
| Date | : | 14.02.2020. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாவில் குடியிருக்கிறேன். நான் கேபிள் டிவி ஆப்பரேட்டர் தொழில் செய்கிறேன். இறந்துப்போன சிவக்குமாரை தெரியும். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு இறந்துப்போன சிவக்குமாரின் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். சிவக்குமார் இறந்துவிட்டதாக சொன்னார்கள். என்னிடம் காட்டபடும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்தையும் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.6. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.7. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலிசார் விசாரணையில் 06.11.2015 அன்று என்னையும் அயுப் கான்

என்பவரையும் வாலாஜா போலிசார் அழைத்ததின் பேரில் நாங்கள் சென்ற போது 1ம் எதிரி கார்த்திக் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த வாக்குமூலத்தில் நானும் அயுப் கான் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் லாவாண்யாவை பார்த்திற்க்காக பயன்படுத்திய இரு சக்கரவாகனத்தை தன்னுடன் வந்தால் ஆஜர் செய்கிறேன் என்று சொன்னதின் பேரில் அம்மூர் வடக்கு சைதாப்பேட்டையில் உள்ள சேகர் என்பரின் வீட்டில் இருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் அயுப் கான் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.